டிஜிட்டல் டெய்லி
Kaalaimani.com
காலைமணி.காம்
9.8.2023 புதன்கிழமை • மதுரை • பக்கங்கள் 25 • Online Edition • www.kaalaimani.com

# நீர்வளத் துறை பொறியாளர்களுக்கு டிஜிபிஎஸ், கையடக்க ஜிபிஎஸ் கருவிகள்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

சென்னை, ஆக.8

நீர்வளத் துறை சார்பில் பொறியாளர்களுக்கு 9 டிஜிபிஎஸ் மற்றும் 214 கையடக்க ஜிபிஎஸ் கருவிகளை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

இந்த டிஜிபிஎஸ் மற்றும் கையடக்க ஜிபிஎஸ் ஆகிய நவீன கருவிகள் செயற்கைக்கோள் தொடர்புடன் இயக்கப்படுகிறது. இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், நீர்வளத்துறையின் திட்ட உருவாக்கப் பிரிவின் கட்டுப்பாட்டிலுள்ள 9 கோட்டங்களுக்கு 9 டிஜிபிஎஸ் கருவிகளையும், 214 கையடக்க ஜிபிஎஸ் கருவிளையும் நீர்வளத்துறை திட்ட உருவாக்கப் பொறியாளர்களுக்கு வழங்கிடும் அடையாளமாக 5 பொறியாளர்களுக்கு அக்கருவிகளை வழங்கினார்.

நீர் ஆதாரங்களை சிறந்த முறையில் மேம்படுத்தி விவசாயம், குடிநீர் மற்றும் தொழிற்சாலைகள் போன்ற பல்வேறு துறைகளின் நீர்த்தேவைகளை பூர்த்தி செய்வதற்கு புதிய கட்டமைப்புகளை உருவாக்குதல், ஏற்கெனவே உள்ள நீர்நிலைகள் மற்றும் அதன் உட்கட்டமைப்புகளை நல்ல முறையில் பராமரித்தல், பாசன கட்டமைப்புகளான அணைகள், அணைக்கட்டுகள், நிலத்தடி தடுப்புசுவர்கள், கால்வாய்கள், வாய்க்கால்கள், ஏரிகள் போன்றவற்றை உருவாக்குதல், புனரமைத்தல் மற்றும் பராமரித்தல் போன்ற பல்வேறு முக்கியப் பணிகளை நீர்வளத்துறை மேற்கொண்டு வருகிறது.



நீர்வளத்துறையின் 2021-2022ம் ஆண்டு மானியக் கோரிக்கையில், நீர்வளத் துறையின் திட்ட உருவாக்க பிரிவின் கட்டுப்பாட்டில் உள்ள 9 கோட்டங்களுக்கு 9 டிஜிபிஎஸ் கருவிகளையும் மற்றும் அப்பிரிவில் உள்ள அனைத்து உதவிப் பொறியாளர்கள் மற்றும் உதவி செயற்பொறியாளர்களுக்கு 214 மடிக்கணினிகள், 214 கையடக்க ஜிபிஎஸ் கருவிகள் மற்றும் 250 பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, இந்த உபகரணங்களை கொள்முதல் செய்திட மொத்தம் 9.50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அக்கருவிகளை நீர்வளத்துறை திட்ட உருவாக்கப் பொறியாளர்களுக்கு வழங்கிடும் வகையில், 9 டிஜிபிஎஸ் கருவிகள் மற்றும் 214 கையடக்க ஜிபிஎஸ் கருவிகள் ஆகியவை எல்காட் மூலம் 5.11 கோடி ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்பட்டது. இந்த DGPS மற்றும் கையடக்க GPS ஆகிய நவீன கருவிகள் செயற்கைக்கோள் தொடர்புடன் இயக்கப்படுகிறது.

மேலும், இந்த கருவிகள் செயற்கைகோள்களிலிருந்து சமிக்ஞைகளைப் பெற்று அதன்மூலம் இருப்பிடத்தை துல்லியமாக அளப்பதால், நீர்பாசன திட்டங்களான தடுப்பணைகள், ஏரிகள், நீர்தேக்கங்கள், கால்வாய்கள் போன்ற அமைப்புகளை அமைத்திட துல்லியமான நிலஅளவைகள் போன்ற ஆய்வு பணிகளை புவியியல் தகவல் அமைப்புடன் இணைந்து மேற்கொள்ளவும், வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கும் பணிகளை நீர்வளத்துறையின் திட்ட உருவாக்க பிரிவு பொறியாளர்கள் துரிதமாக மேற்கொள்ளவும், அதன்மூலம் திட்டங்களின் பலன்கள் மக்களிடம் உரிய காலத்தில் சென்றடையவும் இக்கருவிகள் பெரிதும் உதவுகின்றன. அத்துடன் நீர்வள ஆதாரங்களை தொடர்ந்து கண்காணிப்பதில் இக்கருவிகள் குறிப்பிட்ட பங்கு வகிக்கிறது.

இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நீர்வளத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா, நீர்வளத் துறையின் முதன்மைத் தலைமைப் பொறியாளர் அ.முத்தையா, நீர்வளத்துறையின் திட்ட உருவாக்கப் பிரிவின் தலைமைப் பொறியாளர் க.பொன்ராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

kaalaimani.com in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Phone: 4366425.

# ஜிசாட்-24 செயற்கைக்கோள் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது தகவல், ஒலிபரப்புத்துறை செயலாளர் அபூர்வா சந்திரா தகவல்

புது தில்லி, ஆக.8

நியூஸ்பேஸ் இந்தியா லிமிடெட் (என்.எஸ்.ஐ.எல்) டாடா பிளே-யுடன் இணைந்து ஜிசாட் -24 செயற்கைக்கோளை ஜுன் 2022ல் விண்ணில் செலுத்தியது. தற்போது சுற்றுப்பாதையில் உள்ள இந்த செயற்கைக்கோளின் பயன்பாட்டை டாடா ப்ளே இன்று முதல் தொடங்கியது. இதன் தொடக்க விழா தில்லியில் உள்ள டாடா பிளே -யின் ஒலிபரப்பு மையத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பேசிய தகவல், ஒலிபரப்புத் துறை செயலாளர் திரு அபூர்வா சந்திரா, ஜிசாட் -24- ஐ வெற்றிகரமாக செயல்படுத்திய விண்வெளித் துறை , டாடா பிளே ஆகியவற்றுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தார். இந்த நிகழ்வு தற்சார்பு இந்தியா, விண்வெளி மற்றும் தகவல் தொடர்புத் துறையில் தற்சார்பு ஆகியவற்றை நோக்கி மேலும் ஒரு படி முன்னேற்றமாகும் என்றும் அவர் கூறினார்.

தற்போது டாடா பிளே-யில் 600 அலைவரிசைகள் உள்ளன. இஸ்ரோ செயற்கைக்கோளை இணைப்பதன் மூலம், பொது மக்களுக்கு பயனளிக்கும் வகையில் 900 அலைவரிசைகளை அனுப்ப முடியும். டாடா பிளேயுடன் இணைந்து முதல் முறையாக தேவை அடிப்படையிலான செயற்கைக்கோளை விண்ணில் செலுத்திய என்.எஸ்.ஐ.எல் நிறுவனத்தைத் தனியார்மயமாக்கி நிறுவிய பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையின் உச்ச கட்டம் இது. இந்த அலைவரிசைகள் இப்போது மலைப்பாங்கான வடகிழக்கு மற்றும் அந்தமான் & நிக்கோபார் தீவுகள் உட்பட நாடு முழுவதும் கிடைக்கும்' என்று செயலாளர் மேலும் கூறினார்.

இது குறித்து இஸ்ரோ தலைவர் சோமநாத் தெரிவிக்கையில், டிடிஎச் சேவைகளை வழங்குவதற்காக இஸ்ரோ உருவாக்கிய 4 டன் எடை கொண்ட தகவல் தொடர்பு செயற்கைக்கோளான ஜிசாட்-24, முழுமையான சுற்றுப்பாதை சோதனைக்குப் பிறகு அதன் அதிகபட்ச செயற்கைக்கோள் திறனில் முழுமையாக செயல்படு கிறது. அதிநவீன உள்நாட்டு தொழில்நுட்பத்தால் இயக்கப்படும் இந்தியாவின் தொலைத்தொடர்பு துறையில் ஒரு புரட்சியை இந்த மகத்தான சாதனை குறிக்கிறது. இது நமது நாட்டின் வான்வெளி ஆற்றலுக்கான பெருமையாக செயல்படுகிறது மற்றும் டிமாண்ட் டிரைவ் மின் பிரிவில் இந்தியாவின் வெற்றிகரமான நுழைவை முன்னறிவிக்கிறது என்றார்.

காலைமணி.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# 2023 ஜூன் வரை நிலக்கரி உற்பத்தி 8.51 சதம் அதிகரிப்பு



புது தில்லி, ஆக.8

நிலக்கரி சுரங்கங்களை மூடுவதால் நிலக்கரி நிறுவனங்களின் (இந்திய நிலக்கரி நிறுவனம் / சிங்கரேனி நிலக்கரி நிறுவனம்) சேவை களில் இருந்து எந்தவொரு தொழிலாளியும் பணிநீக்கம் செய்யப்படு வதில்லை. போதுமான பயிற்சியை வழங்குவதன் மூலம், தொழிலா ளர்கள் திறம்பட பயன்படுத்துவதற்காக வேறு அலகுகள்/ நிறுவனங் களுக்கு இடமாற்றம் செய்யப்படுகிறார்கள்/ மாற்றப்படுகிறார்கள்.

நாட்டின் பெரும்பாலான நிலக்கரித் தேவை உள்நாட்டு உற்பத்தி / விநியோகம் மூலம் பூர்த்தி செய்யப்படுகிறது. உள்நாட்டில் நிலக்கரி உற்பத்தியை அதிகரிப்பதிலும், நாட்டில் அத்தியாவசியமற்ற நிலக்கரி இறக்குமதியை தவிர்ப்பதிலும் அரசு கவனம் செலுத்துகிறது. 2022-23 ஆம் ஆண்டில், நிலக்கரி உற்பத்தி முந்தைய ஆண்டை விட 14.77% அதிகரித்துள்ளது. நடப்பு ஆண்டில், ஜூன், 2023 வரை, உள்நாட்டு நிலக்கரி உற்பத்தி, கடந்த ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில், 8.51 சதவீதம் அதிகரித்துள்ளது. நிலக்கரி உற்பத்தியில் நாட்டை தன்னிறைவு அடையச் செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பின்வருமாறு:

நிலக்கரி சுரங்கங்களின் வளர்ச்சியை விரைவுபடுத்த நிலக்கரி அமைச்சகத்தின் வழக்கமான ஆய்வுகள்.

சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) திருத்தச் சட்டம், 2021 ஐ இயற்றுதல், சுரங்க உரிமையாளர்கள் (அணுக் கனிமங்கள் தவிர) தங்கள் வருடாந்திர கனிம உற்பத்தியில் (நிலக்கரி உட்பட) 50% வரை சுரங்கத்துடன் இணைக்கப்பட்ட இறுதி பயன்பாட்டு ஆலையின் தேவையை பூர்த்தி செய்த பின்னர் வெளிச் சந்தையில் விற்பனை செய்ய ஏதுவாகும்.

நிலக்கரி சுரங்கங்களின் செயல்பாட்டை விரைவுபடுத்த நிலக்கரித் துறைக்கான ஒற்றைச் சாளர அனுமதிக்கான இணையதளம்.

நிலக்கரிச் சுரங்கங்களை விரைவாகச் செயல்படுத்துவதற்கு பல் வேறு ஒப்புதல்கள்/ அனுமதிகளைப் பெறுவதற்காக நிலக்கரிச் சுரங்க ஒதுக்கீட்டாளர்களைக் கையிலெடுப்பதற்கான திட்டக் கண்காணிப்பு அலகு. இத்தகவலை மத்திய நிலக்கரி, சுரங்கம் மற்றும் நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி மாநிலங்களவையில் எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்.

# நாட்டில் 57 தளங்களில் 36 விமானப் பயிற்சி நிறுவனங்கள் உள்ளன: அமைச்சர் தகவல்




புது தில்லி, ஆக.8

தற்போது, நாட்டில் 36 விமானப் பயிற்சி நிறுவனங்கள் (எஃப்.டி.ஓ) 57 விமானத் தளங்களில் செயல்படுகின்றன. அவை பயிற்சியாளர்களுக்கு விமானப் பயிற்சியை வழங்குகின்றன. 2022 ஆம் ஆண்டில், சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (டி.ஜி.சி.ஏ) விமானத் தொழில்துறையின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக 1165 வணிக ரீதியாக விமானங்களை ஓட்டும் விமான ஓட்டிகளுக்கான (பைலட்) உரிமங்களை (சி.பி.எல்) வழங்கியது.

பயிற்சி நிறுவனங்களை அதிகரிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பின்வருமாறு:

(i) 2020 ஆம் ஆண்டில், சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் தாராளமயமாக்கப்பட்ட எஃப்.டி.ஓ வழிகாட்டுதல்களை அங்கீகரித்தது, இதில் விமான நிலைய உரிமைத்தொகை நீக்கப்பட்டு, நிலத்துக்கான வாடகைகள் கணிசமாக திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

(ii) 2021 ஆம் ஆண்டில், ஒரு போட்டி ஏல செயல்முறைக்குப் பிறகு, பெலகாவி (கர்நாடகா), ஜல்கான் (மகாராஷ்டிரா), கலபுரகி (கர்நாடகா), கஜுராஹோ (மத்தியப் பிரதேசம்) மற்றும் லீலாபரி (அசாம்) ஆகிய ஐந்து விமான நிலையங்களில் ஒன்பது விமானப் பயிற்சி நிறுவனங்களை நிறுவ விமான நிலையங்கள் ஆணையம் அனுமதி வழங்கியது. ஜல்கான், லீலாபாரி, கஜுராஹோ, பெலகாவி ஆகிய இடங்களில் தலா ஒன்று, கலபுரகியில் 2 என மொத்தம் 6 எஃப்.டி.ஓ மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

(iii) ஜூன் 2022-ல், ஒரு போட்டி ஏல செயல்முறைக்குப் பிறகு, பாவ்நகர் (குஜராத்), ஹூப்பள்ளி (கர்நாடகா), கடப்பா (ஆந்திரா), கின்கர் (ராஜஸ்தான்) மற்றும் சேலம் (தமிழ்நாடு) ஆகிய ஐந்து விமான நிலையங்களில் மேலும் ஆறு எஃப்.டி.ஓ அமைக்க விமான நிலையங்கள் ஆணையம் ஒப்புதல் வழங்கியது. தற்போது, சேலத்தில் (தமிழ்நாடு) ஒரு விமானப் பயிற்சி நிறுவனம் செயல்பாட்டில் உள்ளது.

(iv) விமானப் பயிற்சி நிறுவனங்களில் (எஃப்.டி.ஓ) விமானம் தொடர்பான நடவடிக்கைகளை அங்கீகரிக்கும் உரிமையை பயிற்றுவிப்பாளர்களுக்கு வழங்குவதற்காக விமானப் போக்குவரத்து

இயக்குநரகம் விதிமுறைகளை மாற்றியமைத்தது. இது ஒவ்வொரு ஒவ்வொரு பயிற்சி நிறுவனத்திலும் பயிற்சிக்காக பறக்கக்கூடிய நேரத்தையும் மற்றும் விமானங்களையும் பயன்பாட்டை அதிகரிக்க உதவியிருப்பதுடன் பைலட் உரிமங்களை விரைவாக வழங்க வழிவகுத்துள்ளது. சிவில் விமானப் போக்குவரத்துத்துறை இணை அமைச்சர் வி.கே.சிங் மாநிலங்களவையில் எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் இந்த தகவலைத் தெரிவித்துள்ளார்.

# நாட்டில் கடந்த 9 ஆண்டுகளில் ரூ.14 லட்சம் கோடி வாராக் கடன் தள்ளுபடி: மத்திய அமைச்சர் தகவல்



புது தில்லி, ஆக.8

நாட்டில் கடந்த ஒன்பது நிதிஆண்டுகளில், ரூ.14.56 லட்சம் கோடி மதிப்பிலான வாராக் கடனை வங்கிகள் தள்ளுபடி செய்துள்ளன என மத்திய அரசு தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

மக்களவையில் வாராக் கடன்கள் தள்ளுபடி குறித்த கேள்விக்கு எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் மத்திய நிதித் துறை இணை அமைச்சர் பகவத் காரத் தெரிவித்துள்ளதாவது:

வாராக் கடன்களை மீட்டெடுக்கவும், குறைக்கவும் ரிசர்வ் வங்கி வாயிலாக மத்திய அரசு விரிவான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதனால், 2018, மார்ச் 31ல் ரூ.8.96 லட்சம் கோடியாக இருந்த வாராக் கடன், கடந்த மார்ச், 31ம் தேதி நிலவரப்படி ரூ.4.28 லட்சம் கோடியாக சரிந்துள்ளது.

கடந்த 2014 - 15ம் நிதியாண்டு துவங்கி, இதுவரையிலான ஒன்பது நிதி ஆண்டுகளில் ரூ.14.56 லட்சம் கோடி வாராக் கடனை வங்கிகள் தள்ளுபடி செய்துள்ளன. மொத்த தொகையில் பெரிய தொழில்கள் மற்றும் சேவைகளுக்கான கடன் தள்ளுபடி மட்டும் ரூ.7.41 லட்சம் கோடியாகும். ரிசர்வ் வங்கி தரவுகளின்படி, கடந்த 2022 - 23ம் நிதியாண்டில், தனியார் துறை வங்கிகளின் நிகர தள்ளுபடி கடன்கள், ரூ.73,803 கோடியாகும். அதிக மதிப்புள்ள வழக்குகளில் கவனம் செலுத்துவதற்கு கடன் மீட்பு தீர்ப்பாயங்களின், பண அதிகார வரம்பு 10 லட்சத்தில் இருந்து 20 லட்சமாக உயர்த்தப்பட்டதால், அதிகளவு வாராக் கடன்கள் திரும்பக் கிடைத்துள்ளன.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# தமிழக அரசு மின்வாரியத்துக்கு மானியத் தொகையாக ரூ.227 கோடி வழங்க ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவு

சென்னை, ஆக.8

மின்வாரியத்துக்கு ரூ.227 கோடி மானியத் தொகை வழங்குமாறு தமிழக அரசுக்கு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவிட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

தமிழகத்தில் குடிசை வீடுகள், விவசாயம் உள்ளிட்ட சில பிரிவுகளுக்கு இலவசம் மற்றும் மானிய விலையில் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. அதற்காக, மின்வாரியத்துக்கு நடப்பு நிதி ஆண்டில் ரூ.14,662 கோடி மானியத்தை விடுவிக்குமாறு தமிழக அரசுக்கு, மின்சார ஒழுங்குமுறை ஆணையம் கடந்த ஏப்ரலில் உத்தரவிட்டது. காலாண்டுக்கு ஒரு முறை என்ற கணக்கில், முன்கூட்டியே இந்த மானியம் விடுவிக்க வேண்டும்.

இந் நிலையில், கடந்த ஜூலை 1-ம் தேதி முதல் வீடு, கடை, தொழிற்சாலை உட்பட அனைத்து பிரிவுகளுக்கும் யூனிட்டுக்கு 15 காசு முதல் 25 காசு வரை மின்கட்டணம் உயர்த்தப்பட்டது. இதில், வீடுகளுக்கான கட்டண உயர்வை தமிழக அரசு ஏற்றது. குடிசை வீடுகள், விவசாயம், கைத்தறி போன்ற பிரிவுகளுக்கு ஏற்கெனவே வழங்குவதுபோல மானியம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டது. இதற்காக, மின்வாரியத்துக்கு இந்த நிதி ஆண்டுக்கு கூடுதலாக ரூ.399 கோடி மானியம் வழங்கப்பட வேண்டும். கடந்த நிதி ஆண்டுக்கான மானியத்தில் ரூ.167 கோடி கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது. அந்த தொகை போக, வரும் மார்ச் வரையிலான காலத்துக்கு ரூ.227 கோடி மானியம் வழங்க தமிழக அரசுக்கு ஆணையம் உத்தரவிட்டுள்ளது.



# ஜூலை மாதத்தில் ஹோண்டா கார்கள் விற்பனை 28 சதம் வீழ்ச்சியடைந்தது




மும்பை, ஆக.8

ஹோண்டா கார்ஸ் இந்தியா நிறுவனத்தின் கடந்த ஜூலை மாத உள்நாட்டு மொத்த விற்பனை 28 சதம் சரிவைக் கண்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. இது குறித்து ஹோண்டா நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: கடந்த ஜூலை மாதத்தில் நிறுவனத்தின் உள்நாட்டு மொத்த விற்பனை 4,864-ஆக உள்ளது. உள்நாட்டுச் சந்தையல் கடந்த 2022 ஜூலை மாதத்தில் விற்பனையான 6,784 கார்களுடன் ஒப்பிடுகையில் இது 28 சதம் சரிவாகும். மேலும், கடந்த ஆண்டு ஜூலை மாதத்தில் 2,104-ஆக இருந்த நிறுவனத்தின் ஏற்றுமதி, இந்த ஆண்டின் அதே மாதத்தில் 1,112-ஆகக் குறைந்துள்ளது என்று அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# 2022-23ம் நிதியாண்டில் எரிபொருட்கள் விற்பனை 223 மில்லியன் மெட்ரிக் டன் அதிகரிப்பு



புது தில்லி, ஆக.8

பெட்ரோலியப் பொருட்களின் நுகர்வு, 2022-23-ம் நிதியாண்டில் சுமார் 223 மில்லியன் மெட்ரிக் டன் என்ற அளவில் இருந்தது. இது முந்தைய நிதியாண்டைக் காட்டிலும், 10 சதம் அதிகமாகும். கடந்த சில ஆண்டுகளாக நாடு நிலையான பொருளாதார வளர்ச்சியைக் கொண்டுள்ளது. இதன் விளைவாக தொழில்மய மாக்கல், நகர மயமாக்கல் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு ஆகியவை அதிகரித்து, அதனால் வாகனங்களின் மொத்த விற்பனையும் அதிகரித்துள்ளது. இவை போக்குவரத்து, எரிசக்தி மற்றும் எரிபொருளுக்கான தேவை அதிகரிக்க வழிவகுத்தது.

நவம்பர் 2021 மற்றும் மே 2022 ஆகிய காலகட்டங்களில் இரண்டு முறை பெட்ரோல் மற்றும் டீசல் மீதான மத்திய கலால் வரியை முறையே லிட்டருக்கு ரூ.13 மற்றும் ரூ.16 என்ற அளவில் மத்திய அரசு குறைத்துள்ளது. கலால் வரி குறைப்பின் பலன்கள் முழுமை யாக நுகர்வோருக்கு வழங்கப்பட்டன, இதன் விளைவாக சில்லறை விலைகள் வீழ்ச்சியடைந்தன. இந்த நடவடிக்கை பொருளாதாரத்தை மேலும் ஊக்குவிப்பதையும், நுகர்வை அதிகரிப்பதையும், பணவீக்கத்தை குறைவாக வைத்திருப்பதையும் நோக்கமாகக் கொண்டதாகும். இந்த நடவடிக்கை ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்கு உதவும் வகையில் மேற்கொள்ளப்பட்டது. அதைத் தொடர்ந்து, பல மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களும் பெட் ரோல் மற்றும் டீசல் மீதான வாட் விகிதங்களைக் குறைத்துள்ளன.

எண்ணெய் மற்றும் எரிவாயுவின் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பது, எரிசக்தி செயல்திறன் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கை களை ஊக்குவித்தல், தேவை அதிகரிப்புக்கு முக்கியத்துவம்

அளித்து செயல்படுதல், உயிரி எரிபொருள்கள், பிற மாற்று எரிபொருட்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை ஊக்குவித்தல், மின்சார வாகன சார்ஜிங் வசதிகள் போன்றவற்றுக்கு அரசு முக்கியத்துவம் அளிக்கிறது. உள்நாட்டு கச்சா எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்கவும், இறக்கு மதியை குறைக்கவும் மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளைஎடுத்து வருகிறது. மேலும், எத்தனால், பயோ-டீசல், பயோ-சி.என்.ஜி போன்ற மாற்று எரிபொருள்களின் பயன்பாட்டை அதிகரிக்க தேசிய உயிரி எரிபொருள் கொள்கை, 2018-ஐ அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்தகவலை மத்திய பெட்ரோலியத்துறை இணை அமைச்சர் ராமேஸ்வர் தெலி மாநிலங்களவையில் எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்.

## இந்தியாவில் அதிக லாபம் ஈட்டும் நிறுவனம்

# ரிலையன்ஸை முந்தியது ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா

மும்பை, ஆக.8

நாட்டில் அதிக லாபம் ஈட்டும் நிறுவனமாகி உள்ளது ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா. இதன் மூலம் முகேஷ் அம்பானியின் ரிலையன்ஸ் இண்டஸ்ட் ரீஸை பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளது.




நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் ஈட்டிய லாபத்தின் அடிப் படையில் எஸ்பிஐ முதலிடத்துக்கு வந்துள்ளது. மும் பையை தலைமையிடமாக கொண்டு இயங்கி வருகிறது எஸ்பிஐ. நாட்டின் மிகப்பெரிய பொதுத் துறை வங்கி. இந்நிறுவனம் நடப்பு நிதியாண்டில் 2023-24 ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான முதல் காலாண்டில் ரூ.18,537 கோடியை நிகர லாபமாக ஈட்டி உள்ளது. இதே காலகட்டத்தில் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் ஈட்டிய நிகரலாபம் ரூ.16,011 கோடி ஆகும். கடந்த 2012-13 நிதியாண்டில் இந்தியன் ஆயில் நிறுவனம், ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தை பின்னுக்குத் தள்ளி நாட்டின் அதிக லாபம் ஈட்டும் நிறுவனமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

பெட்ரோ கெமிக்கல், எண்ணெய் மற்றும் எரிவாயு, டெலிகாம் மற்றும் ரீடெயில் மாதிரியான தொழில்களில் ஈடுபட்டு வரும் ரிலையன்ஸ் குழுமத் தலைவராக முகேஷ் அம்பானி உள்ளார். அவரது மொத்த சொத்து மதிப்பு 95.7 பில்லியன் டாலர்களாகும். உலக பணக்காரர்கள் பட்டியலில் தற்போது அவர் 11-வது இடத்தில் உள்ளார்.

# ஜூன் காலாண்டின் இந்திய பொதுத்துறை வங்கிகளின் லாபம் இரட்டிப்பாகியுள்ளது




புது தில்லி, ஆக.8

கடந்த ஜூன் காலாண்டின் இந்திய பொதுத் துறை வங்கி களின் லாபம் இரட்டிப்பாகியுள்ள தாக செய்திகள் வெளியாகி யுள்ளது. இது குறித்து அந்த வங்கிகள் வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்கள் தெரிவிப்பதாவது: கடந்த ஜூன் 30ம் தேதியுடன் நிறைவடைந்த நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் (ஏப்ரல்–ஜூன்) நாட்டின் 12 முக்கிய பொதுத் துறை வங்கிகள் ஈட்டிய மொத்த லாபம் ரூ.34,774 கோடியாக உள்ளது.

இது, 2022–23ம் நிதியாண்டின் ஏப்ரல்–ஜூன் காலகட்டத்தோடு ஒப்பிடுகையில் இரண்டு மடங்குக்கும் மேலாகும். அப்போது பொதுத் துறை வங்கிகள் ரூ.15,306 கோடி லாபம் ஈட்டியிருந் தன. மதிப்பீட்டு காலாண்டில் வட்டி விகித அதிகரிப்புகள் காரண மாக வங்கிகளின் நிகர வட்டி வரம்பு (என்ஐஎம்) அதிகமாகப் பதிவானது. இது, பொதுத்துறை வங்கிகளின் லாபத்தை அதிகரித்தது. கடந்த மார்ச் காலாண்டில் பெரும்பாலான பொதுத் துறை வங்கிகள் 3 சதத்திற்கு மேல் நிகர வட்டி வரம்பை பதிவு செய்துள்ளன.

அதிகபட்சமாக, புணேவில் தலைமையகத்தைக் கொண்டு செயல்படும் மகாராஷ்டிர வங்கி 3.86 சத நிகர வட்டி வரம்பைப் பதிவு செய்துள்ளது. அதற்கு அடுத்தபடியாக சென்ட்ரல் வங்கி 3.62 சதமும், இந்தியன் வங்கி 3.61 சதமும் நிகர வட்டி வரம்பைப் பதிவு செய்துள்ளன.

ஏப்ரல்–ஜூன் காலாண்டில், நான்கு பொதுத் துறை வங்கிகள் 100 சதத்திற்கும் அதிகமான லாப வளர்ச்சியைப் பெற்றுள்ளன. 2022 ஏப்ரல்–ஜூன் காலகட்டத்தில் ரூ.308 கோடியாக இருந்த பஞ்சாப் நேசனல் வங்கியின் லாபம் தற்போது 307 சதம் அதிகரித்து ரூ.1,255 கோடியாக உள்ளது. அதனைத் தொடர்ந்து எஸ்பிஐ லாபம் 178 சத வளர்ச்சியடைந்து ரூ.16,884 கோடியாகவும், பாங்க் ஆஃப் இந்தியாவின் லாபம் 176 சதம் வளர்ச்சியடைந்து ரூ.1,551 கோடியாகவும் இருந்தன என்று அந்த புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

# மதுரையில் இருந்து கோவாவுக்கு விமான சேவை

## ஸ்பைஸ்ஜெட் நிறுவனம் தொடக்கம்




மதுரை, ஆக.8

மதுரை விமான நிலையத்தில் தினமும் உள்நாட்டு, வெளிநாட்டு சேவை வழங்கப்படுகிறது. இண்டிகோ, ஸ்பைஸ் ஜெட், ஏர் இந்தியா ஆகிய 3 விமான நிறுவனங்கள் மட்டுமே தொடர்ந்து சேவை வழங்குகிறது. இதில் உள்நாட்டு, வெளிநாட்டு சேவையாக ஸ்பைஸ் – ஜெட் , ஏர் – இந்தியா விமான நிறுவனங்கள் செயல்படுகின்றன. ஆனால், இண்டிகோ விமான நிறுவனம் உள்நாட்டு சேவை அளிக்கிறது.

இந்நிலையில், ஸ்பைஸ் ஜெட் நிறுவனம் கொரோனாக்கு பிறகு வெளிநாட்டு சேவை மட்டுமே வழங்கிய நிலையில், தற்போது மீண்டும் மதுரையில் இருந்து சென்னைக்கு விமான சேவை நடக்கிறது. மேலும், சென்னை வழியாக கோவா செல்வதற்கு விமான சேவைக்கு தற்போது அந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இதன்படி, தற்போது முதல் எஸ்ஜி–2981 விமானம் மதுரையிலிருந்து மதியம் 12.05 மணிக்கு புறப்பட்டு சென்னை சென்று, சென்னையில் இருந்து கோவாவுக்கு மாலை 4 மணிக்கு சென்றடையும். பின்னர் அங்கிருந்து எஸ்ஜி–2983 விமானம் கோவாவில் இருந்து மாலை 5 மணிக்கு புறப்பட்டு சென்னை வந்து, சென்னையில் இருந்து இரவு 8.10 மணிக்கு மதுரை வந்தடையும் என ஸ்பைஸ் – ஜெட் நிறுவனம் அறிவித்துள்ளது.

ஆகஸ்ட் 10 முதல் 19–ம் வரை எஸ்ஜி–2705 விமானம் ஹைதரா பாத்திலிருந்து தினமும் காலை 10.35 மணிக்கு புறப்பட்டு மதுரை விமான நிலையத்துக்கு பகல் 12.15 மணிக்கு வந்தடையும். பின்னர் அதே விமானம் எஸ்ஜி–04 ஆக மதுரையிலிருந்து பிற்பகல் 1.15 மணிக்கு புறப்பட்டு 2.25 மணிக்கு கொழும்பு சென்றடைகிறது. அதுபோன்று எஸ்ஜி–04 விமானம் கொழும்புவிலிருந்து பிற்பகல் 3.25 மணிக்கு புறப்பட்டு 4.35 மணிக்கு மதுரை விமான நிலையம் வந்தடைகிறது.

பின்னர், மதுரையில் இருந்து எஸ்ஜி–2701 விமானமாக மாலை 5.25 மணிக்கு புறப்பட்டு, இரவு 7.25 மணிக்கு ஐதராபாத் சென்றடையும். பயணிகள் ஆதரவை பொறுத்து இதே நிலை நீடிக்கும் ஸ்பைஸ்–ஜெட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

# வாராக்கடன் வசூல் முயற்சியில் எஸ்பிஐ தீவிரம்

புது தில்லி, ஆக.8

பொதுத்துறை வங்கியான எஸ்பிஐ தனது வராக்கடனான ரூ.96,000 கோடியை மீட்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

இதையடுத்து, இத்தகைய கடன்களை விற்பனை செய்வதற்கு தகுதியான சொத்து மறுசீரமைப்பு நிறுவனங்களை தேடி வருகிறது. எஸ்பிஐ தன்னிடம் கடன் பெற்றுள்ள, 331 கார்ப்பரேட் நிறுவனங் களின் பெயர் பட்டியலை அண்மையில் வெளியிட்டிருந்தது. எஸ்பிஐ வராக்கடன் பட்டியலில், தொலைதொடர்பு நிறுவனமான ஏர்செல் நிறுவனம் ரூ.6,978 கோடியுடன் முதலிடத்தில் உள்ளது. இவற்றின் வாயிலாக, கிட்டதட்ட, ரூ.96,000 கோடி வாராக்கடன் இருக்கும் நிலையில், அவற்றை, சொத்து மறுசீரமைப்பு நிறுவனங்களிடம் விற்பனை செய்துவிட முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. வராக்கடன் விற்பனை' என்பது வங்கிகள் கடனை வசூலிக்க பின்பற்றும் எண்ணற்ற முறைகளில் ஒன்றாகும்.

இதன்படி, வங்கிகள் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கிய கடன்களை வசூலிக்க இயலாத நிலையில், அவற்றை, வராக் கடன்களை வாங்கக் கூடிய, சொத்து மறுசீரமைப்பு நிறுவனங் களுக்கு விற்பனை செய்து, வராக்கடன் பிரச்சனையிலிருந்து வங்கிகள் தங்களை விடுவித்துக்கொள்ளும். கடந்த ஜுன் 30ம் தேதி நிலவரப்படி, எஸ்பிஐ வங்கியின் செயல்படாத சொத்துக்களின் மொத்த மதிப்பு, ரூ.91,328 கோடியாகவும்; வசூல் செய்யப்பட வேண்டிய கடன் கணக்குகளின் கீழ், ரூ.1.76 லட்சம் கோடியும் உள்ளது குறிப்பிடத்தக்கது.



# ரூ.1 கோடிக்கும் அதிகமாக வருமானம் ஈட்டுவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது

புது தில்லி, ஆக.8

நாட்டில் ரூ.1 கோடிக்கும் அதிகமாக ஆண்டு வருமானம் ஈட்டுவோரின் எண்ணிக்கை இரட்டிப்பாகியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. இது குறித்து வருமான வரித் துறை புள்ளிவிவரங்களில் தெரிவித்துள்ளதாவது: 2022-23ம் மதிப்பீட்டு ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட வருமான வரிக் கணக்குகளின்படி, 1,69,890 பேர் தங்களின் ஆண்டு வருமானம் ரூ.1 கோடிக்கும் அதிகம் என்று தெரிவித்துள்ளனர்.

2020-21ம் ஆண்டில் ரூ.1 கோடிக்கும் அதிகமாக ஆண்டு வருமானம் ஈட்டுவோரின் எண்ணிக்கை 81,653-ஆக இருந்தது. மேலும், இந்த எண்ணிக்கை 2 ஆண்டுகளில் இரட்டிப்பாகி 1.69 லட்சம் பேர் ரூ.1 கோடிக்கும் அதிகமாக ஆண்டு வருமானம் ஈட்டுவது தெரியவந்துள்ளது. 2020-21-ஆம் மதிப்பீட்டு ஆண்டில் 7.39 கோடி, 2021-22ம் மதிப்பீட்டு ஆண்டில் சுமார் 7.14 கோடி, 2022-23ம் மதிப்பீட்டு ஆண்டில் 7.78 கோடி வருமான வரிக் கணக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.



# இறக்குமதிக்கு புதிய கட்டுப்பாடு எதிரொலியால் மடிக்கணினிகள் விலை உயர வாய்ப்பு



புது தில்லி, ஆக.8

மத்திய அரசு அண்மையில் வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் மடிக்கணினிகளுக்கு தடை விதித்தது. அதன்படி லேப்டாப், டேப்லெட் மற்றும் சிலவகை கணினி உள்ளிட்ட பொருட்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய அரசிடம் அனுமதி அல்லது உரிமம் பெற வேண்டும். இப்படி உரிமம் பெற்றால் மட்டுமே அந்த பொருட்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படும்.

இந்த நடைமுறை வருகிற நவம்பர் மாதம் 1-ந்தேதி முதல் அமலுக்கு வரும் என மத்திய அரசு அறிவித்துள்ளது. அக்டோபர் 31-ந்தேதிக்குள் விண்ணப்பம் செய்து உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்பிறகு உரிமம் இல்லாமல் லேப்டாப் உள்ளிட்ட கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட பொருட்களை இறக்குமதி செய்ய எந்தவொரு நிறுவனத்துக்கும் அனுமதிக்கப்பட மாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த நடவடிக்கையால் சீனா போன்ற நாடுகளில் இருந்து குறைவான அளவிலேயே கம்ப்யூட்டர் சாதன பொருட்கள் இறக்குமதியாகும் நிலை உருவாகி உள்ளது. அதே சமயம் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கம்ப்யூட்டர் பொருட்களுக்கு தேவை அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. மத்திய அரசின் இந்த புதிய கட்டுப்பாடுகளால் தட்டுப்பாடு ஏற்படும் என்ற நிலை உருவாகி இருப்பதால் இறக்குமதி செய்யப்பட்ட லேப்டாப், டேப்லெட் மற்றும் கம்ப்யூட்டர்களின் விற்பனை திடீரென அதிகரித்து உள்ளது. முந்தைய வாரத்தை விட கடந்த வாரம் இந்த பொருட்களின் விற்பனை 20 முதல் 25 சதம் அதிகரித்துள்ளதாக விற்பனை யாளர்கள் தெரிவித்து உள்ளனர். இந்த வாரம் இது மேலும் அதிகரிக்கும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

# நடப்பு நிதியாண்டில் வாகன உதிரிபாக விற்பனை உயரும்



புது தில்லி, ஆக.8

வாகன உதிரிபாக தொழில், நடப்பு நிதியாண்டில் இரட்டை இலக்க வளர்ச்சியை பதிவு செய்யும் என, அத்துறைக்கான தயாரிப்பாளர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

உள்நாட்டு வாகன உதிரிபாகங்கள் துறையானது, கடந்த 2022-23ம் நிதியாண்டில், இதுவரை இல்லாத அளவிற்கு வருவாயை பதிவு செய்துஉள்ளது.

இதைத் தொடர்ந்து, நடப்பு நிதியாண்டிலும், இந்த விற்பனை வளர்ச்சி தொடரும் எனவும், அத்துடன் வருவாயை இரட்டை இலக்கமாக அதிகரிக்க முடியும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது தேவைகள் அதிகரித்திருப்பதால், இந்த உயர்வு சாத்தியமாகும் என தயாரிப்பாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து, வாகன உதிரிபாக தயாரிப்பாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளதாவது: கடந்த நிதியாண்டில், ரூ.5.6 லட்சம் கோடி வருவாயை இத்துறை ஈட்டியுள்ளது. முந்தைய ஆண்டான 2021-22ம் ஆண்டின் ரூ.4.2 லட்சம் கோடியை விட, இது 33 சத அதிக வளர்ச்சியாகும். கடந்த 2022-23ல், ஏற்றுமதி 5 சதம் அதிகரித்து, ரூ.1.61 லட்சம் கோடியாகவும்; இறக்குமதி 11 சதம் அதிகரித்து ரூ.1.63 லட்சம் கோடியாகவும் இருந்தது. செமிகண்டக்டர்கள் கிடைப்பது சுலபமாகி வருவது, உள்ளீட்டு மூலப்பொருட்களுக்கான செலவுகள் குறைந்து வருவது ஆகியவற்றால், நடப்பு நிதியாண்டில் வாகனத் துறை சிறப்பாக செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது வாகன உதிரிபாகங்கள் துறைக்கு நன்மையை உண்டாக்கும். தற்போது, வாகன விற்பனை தொற்றுநோய்க்கு முந்தைய நிலையை எட்டியுள்ளதால், நடப்பாண்டில் விற்பனை வருவாய் வளர்ச்சி இரட்டை இலக்கத்தைத் தொடும் என்பதே எங்களது எதிர்பார்ப்பு. இவ்வாறு தெரிவித்துள்ளது.

# 2023ல் பிரிக்ஸ் ஸ்டார்ட்அப் மன்றத்தை இந்தியா தொடங்கும்: பியூஸ் கோயல்




புது தில்லி, ஆக.8

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை, ஜவுளி, நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல், தென்னாப்பிரிக்காவின் தலைமையில் மெய்நிகர் முறையில் ஏற்பாடு செய்யப்பட்ட 7 வது பிரிக்ஸ் தொழில்துறை அமைச்சர்கள் கூட்டத்தில்' பங்கேற்றார். ஸ்டார்ட் அப்கள், முதலீட்டாளர்கள், தொழில் காப்பகங்கள் மற்றும் ஆர்வமுள்ள தொழில்முனைவோர்களிடையே ஒத்துழைப்பை எளிதாக்குவதற்கும் சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்வதற்கும் 2023ம் ஆண்டில் பிரிக்ஸ் ஸ்டார்ட்அப் மன்றத்தை இந்தியா தொடங்கும் என்று கோயல் அறிவித்தார்.

பியூஷ் கோயல், இந்தியாவில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை எடுத்துரைத்து, நாட்டில் கிட்டத்தட்ட 1,00,000 ஸ்டார்ட்அப்களை உருவாக்க வழிவகுத்த ஸ்டார்ட்அப் இந்தியா முன்முயற்சி குறித்தும் குறிப்பிட்டார். உற்பத்தி முறைகளை மாற்றியமைத்தல்' மற்றும் பிற பிரிக்ஸ் உறுப்பு நாடுகளுக்கும் பரந்த சர்வதேச சமூகத்திற்கும் இந்தியா வழங்கக்கூடிய ஆதரவு குறித்தும் அமைச்சர் விளக்கினார். வசுதைவ குடும்பகம் என்ற இந்தியாவின் உறுதிப்பாட்டை பியூஷ் கோயல் மீண்டும் வலியுறுத்தினார். மற்ற பிரிக்ஸ் நாடுகளின் (பிரேசில், ரஷ்யா, சீனா மற்றும் தென்னாப்பிரிக்கா) தொழில்துறை அமைச்சர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். கூட்டு பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பிரிக்ஸ் நாடுகளிடையே டிஜிட்டல் மயமாக்கல், தொழில் மயமாக்கல், புத்தாக்கம், அனைவரையும் உள்ளடக்குதல், முதலீடு ஆகியவற்றின் அவசியத்தை அமைச்சர்கள் மீண்டும் வலியுறுத்தினர்.

அனைத்து பொருளாதாரத் துறைகளின் டிஜிட்டல் மாற்றத்தை ஊக்குவிப்பதில் தொழில்துறை 4.0 மற்றும் பிற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களின் அதிகரித்து வரும் முக்கியத்துவத்தை அவர்கள் அங்கீகரித்தனர். இந்த பிரகடனத்தின் மூலம், பிரிக்ஸ் உறுப்பினர்கள் மனிதவள மேம்பாடு மற்றும் திறன் மேம்பாடு மற்றும் மறுதிறன் திட்டங்களில் ஒத்துழைப்பிற்கான வாய்ப்புகளை ஆராய்வதன் அவசியத்தை ஒப்புக்கொண்டனர்.

திறந்த, நியாயமான, துடிப்பான, நெகிழ்வான மற்றும் பாகுபாடற்ற சூழலை கூட்டாக உருவாக்குவதன் மூலம் தொழில்துறை ஒத்துழைப்பை ஆழப்படுத்துவதற்கும், தொழில்துறை பொருளாதாரத்தின் மீட்பு மற்றும் வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கும் தங்கள் உறுதிப்பாட்டை அமைச்சர்கள் மீண்டும் வலியுறுத்தினர். குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் முக்கியப் பங்கு மற்றும் உலகளாவிய தொழில் சங்கிலிகள், விநியோகச் சங்கிலிகள் மற்றும் மதிப்புச் சங்கிலிகளில் அவற்றின் ஒருங்கிணைப்பு மற்றும் பன் முகப்படுத்தலின் முக்கியத்துவத்தை அமைச்சர்கள் அங்கீகரித் தனர். பெண்கள், இளைஞர்கள் மற்றும் பின்தங்கிய குழுக்களுக்கு சொந்தமான / நிர்வகிக்கப்படும் திட்டங்களை உள்ளடக்கிய வளர்ச்சிக்கு பிரிக்ஸ் நாடுகளுக்குள் சந்தை வாய்ப்புகளை உருவாக்க வேண்டியதன் அவசியத்தையும் அமைச்சர்கள் அடிக்கோடிட்டுக் காட்டினர்.




சென்னை தலைமைச் செயலகத்தில் ஹூண்டாய் மோட்டார் நிறுவனத்தின் செயல் தலைவர் யூசன் சங் முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து, தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் தொழில் முதலீடுகள் குறித்து பேசினார்.

# 2கே ரெசல்யூசன் கொண்ட புது மானிட்டர்கள்

## சாம்சங் நிறுவனம் அறிமுகம்

மும்பை, ஆக.8

சாம்சங் நிறுவனத்தின் இரண்டு புதிய மானிட்டர்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

வியூபினிட்டி எஸ் 8 மற்றும் எஸ் 9 சீரிஸ் மாடல்களை சமீபத்தில் அறிமுகம் செய்த சாம்சங் தற்போது, வியூபினிட்டி எஸ்65யுசி மற்றும் வியூபினிட்டி எஸ்65விசி மாடல்களை அறிமுகம் செய்து இருக்கிறது.



இரண்டு மானிட்டர்களும் கிரியேடிவ் துறையில் பணியாற்றுவோரை குறிவைத்து அறிமுகம் செய்யப்பட்டு உள்ளது. இரண்டு மானிட்டர்களிலும் 34 இன்ச் விசி வளைந்த பேனல் மற்றும் 1000ஆர் ரேடியஸ் கொண்டிருக்கிறது. இந்த மானிட்டர் 3440x1440 பிக்சல் ரெசல்யூசன் கொண்டிருக்கிறது. இந்த மானிட்டர் அதிகபட்சம் 100ஹெர்ட்ஸ் வரையிலான ரிப்ரெஷ் ரேட் கொண்டிருக்கிறது. இத்துடன் 5 வாட் பில்ட்-இன் ஸ்பீக்கர்கள் உள்ளன. இதன் டிஸ்ப்ளேக்களில் 1.07 பில்லியன் நிறங்களை சப்போர்ட் செய்கிறது.

மற்ற அம்சங்களை பொருத்தவரை ஐ சேவர் மோட், ஃப்ளிக்கர் - ஃபிரீ தொழில்நுட்பம் வழங்கப்படுகிறது. இதன் மூலம் நீண்ட நேர பயன்பாடுகளின் போதும் கண்களில் சோர்வு ஏற்படுவது குறைக்கப்படுகிறது. இத்துடன் பிக்சர்-இன்-பிக்சர் மற்றும் பிக்சர்-பை-பிக்சர் அம்சங்கள் வழங்கப்படுகிறது.

இத்துடன் இமேஜ்சைஸ், ஆஃப் டைமர் பிளஸ், எச்டிஆர் 10 பிளஸ், ஆட்டோ சோர்ஸ் ஸ்விட்ச் பிளஸ், அடாப்டிவ் பிக்சர் மற்றும் கேஓய்எம் ஸ்விட்ச் வசதிகள் வழங்கப்படுகின்றன. கனெக்டிவிட்டிக்கு 1எக்ஸ் 1.2இஏ டிஸ்ப்ளே போர்ட், 1எக்ஸ் எச்டிஎம்ஐ மற்றும் ஹெட்போன் போர்ட்கள் உள்ளன. இத்துடன் யுஎஸ்பி போர்ட்கள், யுஎஸ்பி சி போர்ட், மற்றும் லேன் நெட்வொர்க் கனெக்சன் வசதியும் வழங்கப்படுகிறது. இரண்டு புதிய மானிட்டர்களும் இம்மாத இறுதியில் ஜெர்மனியில் விற்பனைக்கு வருகிறது. இதன் விலை மற்றும் இந்திய வெளியீடு குறித்து இதுவரை எந்த தகவலும் இல்லை.

# ஆகஸ்ட் மாதத்தில் வாகனங்களின் விற்பனை 60 சதம் அதிகரிக்கும் என எதிர்பார்ப்பு

சென்னை, ஆக.8

ஆகஸ்ட் மாதம் வாகனங்களின் விற்பனை, 59 சதம் வரை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக, வாகன முகவர்கள் சங்க கூட்டமைப்பு நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளதாக தகவல்கள் வெளியாகி யுள்ளது. இது குறித்து அச்சங்கம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த ஜூலை மாதத்தில் வாகனங்களின் விற்பனை, 10 சதம் அதிகரித்துள்ளது. இம்மாதத்தில் 12.28 லட்சம் இருசக்கர வாக னங்கள் விற்பனையாகி உள்ளன. இது 2022 ஜூலையில், 11.35 லட்சமாக இருந்தது. கடந்தாண்டுடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டு விற்பனை 8.15 சதம் அதிகரித்து உள்ளது. இதேபோல, 94,000 3 சக்கர வாகனங்கள் விற்பனையாகி உள்ளன. இது 2022ல், 54,000 ஆக இருந்தது. கடந்தாண்டுடன் ஒப்பிடுகையில் 74 சதவீதம் விற்பனை அதிகரித்து உள்ளது. ஜூலையில் பயணியர் வாகனம், 2.84 லட்சம் விற்பனையாகியுள்ளது. இது 2022ல் 2.73 லட்சம் ஆக இருந்தது.

கடந்தாண்டுடன் ஒப்பிடுகையில், 4 சதம் வளர்ச்சி ஏற்பட்டு உள்ளது. ஒட்டுமொத்தமாக, 17.70 லட்சம் வாகனங்கள் ஜூலையில் விற்பனையாகியுள்ளன. இது 2022 ஜூலையில், 16.16 லட்சம் ஆக இருந்தது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், 10 சதம் விற்பனை வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. வாகன முகவர்கள் சங்க கூட்டமைப்பு நடத்திய ஆன்லைன் ஆய்வில், ஆகஸ்ட் மாதம் விற்பனை வளர்ச்சி 59.84 சதமாக இருக்கும் என, எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பஜாஜ் ஃபைனான்ஸில் நிலை வைப்பு நிதி முதலீடுகளின் மதிப்பு ரூ.50,000 கோடியை கடந்தது

மும்பை, ஆக.8

முன்னணி வங்கியல்லா நிதி நிறுவனங்களில் ஒன்றான பஜாஜ் ஃபைனான்ஸில் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலை வைப்பு நிதி முதலீடுகளின் மதிப்பு ரூ.50,000 கோடியைக் கடந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. இது குறித்து பஜாஜ் பைனான்ஸ் நிறுவனத்தின் துணைத் தலைவர் சச்சின் சிக்கா தெரிவித்துள் ளதாவது: வெறும் 8 அல்லது 9 ஆண்டுகளுக்குள் நிறுவனத்தில் மேற் கொள்ளப்படும் நிலை வைப்பு நிதி முதலீடுகளின் மதிப்பு பூஜ்யத்தி லிருந்து ரூ.50,000 கோடியாக அதிகரித்துள்ளது. அந்த வகையில் நிறுவனத்தின் கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம் (சிஏஜிஆர்) 60 சதமாக உள்ளது. மேலும், தற்போது எங்களுக்கு சுமார் 5 லட்சம் வைப்பு நிதி வாடிக்கையாளர்கள் உள்ளனர். அவர்கள் அனைவரும் இதுவரை சுமார் 14 லட்சம் நிலை வைப்பு முதலீடுகளை எங்களிடம் மேற்கொண்டுள்ளனர். கவர்ச்சிகரமான வட்டி விகிதங்களும், நிறுவ னத்தின் மீது வாடிக்கையாளர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையுமே இந்த வளர்ச்சிக்குக் காரணங்கள் ஆகும் என்றார் அவர்.



# வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில்; நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகள் ஆட்சியர் ஆய்வு

விருதுநகர், ஆக.8

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு பேரூராட்சி மற்றும் வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் வீ.ப.ஜெயசீலன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதன்படி வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியம் மேலக்கோபாலபுரம் ஊராட்சியில் பிரதம மந்திரி ஆவாஷ்; யோஜனா திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் வீடுகளையும் 15வது மானிய நிதி குழுவின் கீழ் ரூ.1.05 லட்சம் மதிப்பில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி சமையலறை கூடம் புரணமைக்கப்;பட்டுள்ளதையும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.6.62 லட்சம் மதிப்பில் உயர்நிலைப் பள்ளியில் சுற்றுச்சுவர் கட்டப்பட்டுள்ளதையும் கான்சாபுரம் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.29.69 இலட்சம் மதிப்பில் பெரிய ஓடை கால்வாய் வரத்து கால்வாய் மேம்பாடு செய்யப்பட்டு வரும் பணிகளையும் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.93.68 லட்சம் மதிப்பில் கான்சாபுரம்– அத்திகோயில் சாலை பணிகள் நடைபெற்று வருவதையும் மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், வத்திராயிருப்பு இந்து மேல்நிலைப்பள்ளியில் மாணவ மாணவிகளுடன் இலக்கை நிர்ணயிப்பது அதை நோக்கிய பயணத்தை மேற்கொள்வது குறித்தும் உயர்கல்விக்கு தேசிய அளவில் உள்ள வாய்ப்புகள் குறித்தும் கலந்துரையாடினார்.

தொடர்ந்து வத்திராயிருப்பு பேரூராட்சியில் தூய்மை பாரத இயக்கம் மூலம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பேரூராட்சிப் பகுதிகளில் உள்ள வீடுகள் வணிகவளாகங்கள் தொழிற்சாலைகளில் இருந்து சேகரிக்கப்படும் காகிதம் ரப்பர் பிளாஸ்டிக் பொருள்கள் கண்ணாடிகள் தோல் பதனிடும் தொழிற் சாலை கழிவுகள் உள்ளிட்ட தேவை இல்லாத பயன்படுத்தப்பட்ட திடப்பொருள்களை சரியான முறையில் மறுபடியும் உபயோகிப்பதற்கான மறுசுழற்சி செய்யும் பணிகள் உலர்களம் மேற்கொள்ள வள மீட்பு பூங்கா அமைக்க ரூ.34.20 லட்சம் மதிப்பில் பணிகள் நடைபெற்று வருவதையும் மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் நடைபெற்று வரும் பணிகளை விரைவாகவும் தரமாகவும் முடிக்குமாறு சம்மந்தப்பட்ட அரசு அலுவலர்களை மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார்.

# சென்னையில் ஜியோ லேப்டாப் உற்பத்தி செய்ய திட்டம்?



சென்னை, ஆக.8

ரிலையன்ஸ் ரீடைல் நிறுவனம் அனைத்து துறைகளிலும் நுழைந்து வரும் வேளையில் ஜியோ பிராண்ட் கீழ் அடுத்தடுத்து பல எலக்ட்ரானிக்ஸ் கருவிகளை தயாரித்து வெளியிட்டு வரும் வேளையில் சமீபத்தில் 16,499 ரூபாய் விலையில் அறிமுகம் செய்த லேப்டாப் மக்கள் மத்தியில் கலவையான விமர்சனங்களை பெற்றாலும், இதன் உற்பத்தியை அதிகரிக்க முடிவு செய்துள்ளது.

இதேவேளையில் மத்திய அரசு இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்படும் லேப்டாப் மீது புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இந்த வாய்ப்பை சரியாக பயன்படுத்திக்கொள்ள ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் தனது லேப்டாப் உற்பத்தியை அதிகரிக்க முடிவு செய்துள்ளது.இதற்காக இந்தியாவின் முன்னணி எலக்ட்ரானிக்ஸ் கருவிகள் உற்பத்தி நிறுவனமாக டிக்சன் டெக்னாலஜிஸ் நிறுவனத்துடன் ரிலையன்ஸ் பேச்சுவார்த்தை நடத்த உள்ளது. தற்போது டிக்சன் டெக்னாலஜிஸ், ரிலையன்ஸ்-ன் மலிவுவிலை 4ஜி போனான பாரத் போன்களை தயாரித்து வருகிறது. தற்போது செய்யப்பட்ட ஒப்பந்தம் கீழ் டிக்சன் சுமார் 1.5 கோடி ஜியோ பாரத் போன்களை தயாரிக்கிறது.

இதோடு அமெரிக்காவின் சான்மினா உடன் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் கூட்டணியில் சென்னையில் அமைக்கப்படும் எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள் தொழிற்சாலையில் ஜியோ லேப்டாப் தயாரிக்கப்பட உள்ளது. டிக்சன் டெக்னாலஜிஸ் நிறுவனத்தில் தயாரிப்பதை காட்டிலும் சான்மினா தொழிற்சாலையில் தயாரிப்பது தான் லாபம், காரணம் இக்கூட்டணி நிறுவனத்தில் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் 51 சதவீத பங்குகளை கைப்பற்றியுள்ளது. ஆனால் இது சாத்தியமாக ஜியோ லேப்டாப்-க்கு போதுமான புக்கிங் வர வேண்டும் இல்லையெனில் அதிக எண்ணிக்கையிலான உற்பத்தியும், விற்பனையும் சாத்தியமாகாது.

# ராமேஸ்வரத்தில் 50 தங்குமிடங்கள்: ஓயோ அறிவிப்பு

புது தில்லி, ஆக.8

நடப்பாண்டு இறுதிக்குள் ராமேஸ்வரம் மற்றும் ராமநாத புரத்தில் 50 தங்குமிடங்களை கூடுதலாக வழங்கவுள்ளதாக ஓயோ தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

மின்னணு விருந்தோம்பல் தளமான ஓயோ நிறுவனம், இந்த ஆண்டு இறுதிக்குள் ராமேஸ்வரம் மற்றும் ராமநாதபுரத்தில் 50 தங்குமிடங்களை வழங்க இருப்பதாக தெரிவித்துள்ளது. மேலும் பெரும்பாலானவை ராமநாதசுவாமி கோவிலுக்கு அருகில் அமையவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஓயோ நிறுவனர் ரித்தேஷ் அகர்வால் தெரிவித்துள்ளதாவது: ராமேஸ்வரத்தை ஒரு சுற்றுலா மையமாக மேம்படுத்தும் முயற்சியில் உறுதுணையாக இருப்பது உற்சாகம் அளிக்கிறது. எங்களது சுற்றுலா மேம்பாட்டு திட்டத்தின் வாயிலாக, இப்பகுதியில் உள்ளவர்களுக்கு, தங்கள் இல்லத்தின் ஒருபகுதியை விருந்தினர்களுக்கு வழங்கி, அதன் வாயிலாக வருமானம் ஈட்டுவதற்கான பயிற்சிகளையும் வழங்க உள்ளோம். இந்த திட்டத்தை திறம்பட செயல்படுத்த அரசு அதிகாரிகள், பொதுமக்களுடன் இணைந்து பணியாற்ற நாங்கள் தயாராக உள்ளோம். இவ்வாறு அவர் கூறினார். ராமேஸ்வரம் மக்கள் தங்கள் இல்லத்தின் வாயிலாக வருமானம் ஈட்டும் வாய்ப்பு ஓயோவால் உருவாகிறது.



# சாம்சங் கேலக்ஸி எப்34 5ஜி போன் அறிமுகம்

சென்னை, ஆக.8

சாம்சங் நிறுவனம் இந்திய சந்தையில் தனது கேலக்ஸி எப்34 5ஜி ஸ்மார்ட்போனினை அறிமுகம் செய்தது. புதிய கேலக்ஸி எப் 34 5ஜி மாடலில் 6.46 இன்ச் எப்எச்டி+ 120ஹெர்ட்ஸ் சூப்பர் அமோல்ட் ஸ்கிரீன், 13எம்பி செல்ஃபி கேமரா, எக்சைனோஸ் 1280 பிராசஸர், அதிகபட்சம் 8 ஜிபி ரேம் வழங்கப்பட்டு இருக்கிறது. இத்துடன் ஆண்ட் ராய்டு 13 சார்ந்த ஒன் யுஐ 5.1 வழங்கப்படுகிறது. இந்த ஸ்மார்ட் போனிற்கு நான்கு தலைமுறை ஒ.எஸ். அப்கிரேடுகள், ஐந்து ஆண்டு களுக்கு செக்யூரிட்டி அப்டேட்கள் வழங்கப்படுகிறது. மேலும் 50 எம்பி பிரைமரி கேமரா, ஓஐஎஸ், 8எம்பி அல்ட்ரா வைடு கேமரா, 2எம்பி மேக்ரோ லென்ஸ் வழங்கப்பட்டு இருக்கிறது. சாம்சங் கேலக்ஸி எப் 34 5ஜி ஸ்மார்ட்போன் எலெக்ட்ரிக் பிளாக் மற்றும் மிஸ்டிக் கிரீன் என 2 வண்ணங்களில் கிடைக்கிறது. இதன் 6 ஜிபி ரேம், 128 ஜிபி மெமரி மாடல் விலை ரூ.18,999 என்றும் 8 ஜிபி ரேம், 128 ஜிபி மெமரி மாடல் விலை ரூ. 20,999 என்று நிர்ணயம் செய் யப்பட்டு உள்ளது. விற்பனை ஆகஸ்ட் 12 ஆம் தேதி துவங்குகிறது. முன்பதிவு ஏற்கனவே துவங்கி நடைபெற்று வருகிறது.

